அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 19/93

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு. 07.
1993,செப்டம்பர் மாதம் 06ந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

எழுதுநர் அதையொத்த சேவைகளிலுள்ள
முரன்பாடுகளை அகற்றுதல்.

இணைந்த சேவைகளின் பொது எழுதுநர் சேவை வகுப்பு 11"ஆ" வகுப்பு 11 "அ",வகுப்பு,1 அதிசிறப்பு வகுப்பு ஆகிய அத்தகைய பதவியுயர்வுகளைக் கொண்டிராத, அதையொத்த சேவைகளில் அவற்றுக்கு நிகரான வகுப்புகளையும் தரங்களையும் உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. உ.ம்: கணக்குப்பதியுநர் சேவை,சிறாப்பர் சேவை, களஞ்சியக்காப்பாளர் சேவை ஆயினும் இச்சேவைகளில் புதிதாக உருவாக்கப்பட்ட அதிசிறப்புத் தரத்துக்கு 37/9ஆம் இலக்க அ.நி.சுற்றறிக்கையின் குறிப்பிடப்பட்டுள்ள எஸ்-3-5 சம்பள அளவுத்திட்டம் ஏற்புடையதாக இருக்கும்.

02. சுருக்கெழுத்தாளர் சேவைக்குரிய இப்போதைய அளவுத்திட்டங்களும் தரங்களும் மாற்றமின்றி அவ்வாறே இருக்கும். சுருக்கெழுத்தாளர் சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் க.பொ.த.ப.(உயர்தரம்)அல்லது அதையொத்த பரீட்சைக்கு உயர்த்தப்பட்டுள்ளன.

03. எழுதுநர், அதையொத்த சேவைகளின் அதிசிறப்புத்தரங்களுக்கு அலுவலர்களுக்கு பதவியுயர்வுகள் வழங்கும்போது சேவைமூப்புக்கும் திறமைக்கும் 65%வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் 35%என்ற ஒரு நியம விகிதம் பின்பற்றப்பட வேண்டும். இச் சுற்றறிக்கையின் நோக்கத்துக்காக எழுதுநர்,அதையொத்த சேவைகள்.

(1) பொது எழுதுநர் சேவை
(11) தட்டெழுத்தாளர் சேவை
(111) சுருக்கெழுத்தாளர் சேவை
(1V) கணக்குப் பதியுநர் சேவை
(V) சிறாப்பர் சேவை
(V1) களஞ்சியக் காப்பாளர் சேவை

04. 387ஆம் இலக்க அ.நி.சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள ஆர்.3-8 சம்பள அளவுத்திட்டம், 1992.01.10ஆம் தேதிய 387ஆம் இலக்க அ.நி.சுற்றறிக்கையில் விதித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகட்கு உட்பட்டு,புகைவண்டி எழுதுநர் சேவை,அச்சக எழுதுநர் ஆகியவற்றின் அதிசிறப்புவகுப்புக்கு ஏற்புடையதாகும்.

05. புகைவண்டி நேரக் காப்பாளர் எழுதுநர் சேவையிலும் ஒரு அதிசிறப்புத்தரம் உருவாக்கப்படும். 37/92ஆம் இலக்க அ.நி.சுற்றறிக்கையின் எஸ்.3-8 சம்பள அளவுத்திட்டம் 1993யூலை மாதம் 21ஆம் திகதி முதல் உரியதாக்கப்படும்.

ஒப்பம்.எம்.டி.டீ.பீரிஸ்
செயலாளர்
அரசாங்க நிருவாக அமைச்சு.